## March 11, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அறிவிக்கும் முன்மொழிவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. தமிழகத்தின் முக்கிய நகரங்களில் ஒன்றான மதுரை மக்களின் விருப்பங்களை மனதில் கொண்டு இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

(i) பிரதமர் மோடி புதன்கிழமை தமிழகத்துக்கு வருகை தரவுள்ள நிலையில், மத்திய அமைச்சரவையின் முடிவு கவனம் பெற்றுள்ளது.

(ii) தில்லியில் பிரதமர் தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்குப்பின் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அறிவிக்கும் கொள்கை முடிவு, அந்தக் கோயில் நகரத்துக்கு உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து விமானப் போக்குவரத்தை உறுதி செய்யும். மதுரையைச் சுற்றி தொழில் செயல்பாடுகள் பெருகும். கல்வி மற்றும் மருத்துவ சார் மையமாக மதுரை வலுப்படும்.

(iii) மதுரை விமான நிலையத்தில் இருந்து சர்வதேச விமானங்களை இயக்க பல்வேறு விமான நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன.

(iv) தமிழகத்தில் உள்ள பழைமையான விமான நிலையங்களில் மதுரையும் ஒன்று. இந்த விமான நிலையத்தை சர்வதேச அந்தஸ்துக்கு தரம் உயர்த்தும்போது, பிராந்திய விமானப் போக்குவரத்து மேம்படும்; வர்த்தகச் செயல்பாடுகள் ஊக்கம் பெறும். இது, பிராந்திய பொருளாதார வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இருக்கும்.

(v) மதுரையின் வரலாற்றுப் பெருமைக்கு இணங்க சர்வதேச பக்தர்கள் மற்றும் வணிகங்களை ஈர்க்கும் வகையில் விமான நிலைய செயல்திறன் மேம்படுத்தப்படுகிறது என்று அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

2. மேற்காசிய போர் நிலவரம் காரணமாக சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கு (எல்பிஜி) தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள சூழலில், மத்திய அமைச்சர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி அவசர ஆலோசனை மேற்கொண்டார்.

(i) பொதுமக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்த ஒருங்கிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர்களுக்கு பிரதமர் அறிவுறுத்தினார்.

(ii) ஈரான் மீது அமெரிக்க-இஸ்ரேல் கூட்டுப் படைகள் கடந்த ஒரு வார காலமாகத் தாக்குதல் நடத்தி வருகின்றன. பதில் தாக்குதல் நடத்திவரும் ஈரான், மேற்காசியாவில் இருந்து கப்பல்கள் மூலம் கச்சா எண்ணெய், எரிவாயு கொண்டு செல்லப் பயன்படுத்தப்படும் ஹோர்முஸ் நீரிணை கடல் வழித்தடத்தை மூடிவிட்டது.

(iii) இந்தியாவுக்கு முக்கிய விநியோகஸ்தரான கத்தார், எல்என்ஜி (திரவ இயற்கைஎரிவாயு உற்பத்தியை முழுமையாக நிறுத்திவிட்டது. இதனிடையே, இந்தப் போர் மேலும் விரிவடைந்து வருவதால், எரிவாயுமற்றும் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

(iv) இதன் தாக்கம் இந்தியாவில் உடனடியாக எதிரொலித்துள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உணவகங்களுக்குப் பயன்படுத்தப்படும் வணிக எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது; பல மாநிலங்களில் அதன் விநியோகம் முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது.

(v) அடுத்த ஓரிரு நாள்களுக்கு மட்டுமே சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கையிருப்பு இருப்பதால், அதன்பிறகு உணவகங்களை மூட வேண்டிய நிலை ஏற்படும் என்றும், மும்பை, பெங்களூரு, சென்னை உள்ளிட்ட பெருநகரங்களின் உணவக உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(vi) மத்திய அரசு குழு அமைப்பு:

- வணிக எரிவாயு சிலிண்டர் திடீர் தட்டுப்பாடு பிரச்னை குறித்து ஆராய ஒரு குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.
- இது குறித்து மத்திய பெட்ரோ லியத் துறை அமைச்சகம் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'உண வகங்கள், ஹோட்டல்கள் மற்றும் பிற தொழில் நிறுவனங்களுக்கான வணிக எரிவாயு சிலிண்டர் விநியோகம் குறித்து ஆராய எண்ணெய் சந்தை நிறுவனங்களின் (ஓஎம்சி) மூன்று செயல் இயக்குநர்களை உள்ளடக்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(vii) உள்நாட்டு உற்பத்தி 10% அதிகரிப்பு :-

- அத்தியாவசியப் சமையல் எரிவாயு உற்பத்தியை அதிகரிக்குமாறு எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின் கீழ் அவசரகால உத்தரவை மத்திய அரசு பிறப்பித்தது. சுத்திகரிப்பு நிறுவனங்கள் விநியோகிக்கும் எரிவாயுவை, சமையல் நோக்கங்களுக்காக வீட்டு உபயோகத்துக்கு மட்டுமே விநியோகிக்க வேண்டும். இந்த உத்தரவை மீறினால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் உத்தரவிட்டது.
- இதன் பலனாக, எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள் உற்பத்தியைத் தீவிரப்படுத்தியதால், உள்நாட்டு சமையல் எரிவாயு உற்பத்தி 10 சதவீதம் அதிகரித்துள்ளது. மேலும், நாட்டில் தற்போதைய நிலையில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படவில்லை. நிலையான விநியோகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது' என்று மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

3. அண்டை நாடான நேபாளத்தில் அண்மையில் நடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின் நேரடி முறைக்கான இறுதி முடிவுகள் வெளியாகியுள்ளன.

(i) அதன்படி, இளைஞர்களின் ஆதரவு பெற்ற ராஷ்ட்ரீய சுதந்திர கட்சி (ஆர்எஸ்பி) வரலாற்று வெற்றியைப் பெற்றுள்ளது. நேரடித் தேர்தல் முறையில் மொத்தமுள்ள 165 இடங்களில் 125 இடங்களைக் கைப்பற்றி, அக்கட்சி தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கத் தயாராகி வருகிறது.

(ii) கடந்த ஆண்டு, செப்டம்பரில் இளைஞர்களின் போராட்டத்தினால், முன்னாள் பிரதமர் கே.பி.சர்மா ஒலி தலைமையிலான கூட்டணி அரசு கவிழ்ந்தது. 6 மாதங்களுக்குப் பிறகு, புதிய நாடாளுமன்றத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

(iii) நேபாள நாடாளுமன்றத்தின் மொத்தமுள்ள 275 இடங்களில் 165 உறுப்பினர்கள் நேரடி தேர்தல் மூலமும், எஞ்சிய 110 உறுப்பினர்கள் வாக்கு அடிப்படையிலான விகிதாசார பிரதிநிதித்துவ முறையிலும் தேர்ந்தெடுக் கப்படுவர்.

(iv) இந்நிலையில், நேரடி தேர்தல் முறைக்கான வாக்கு எண்ணிக்கை நிறைவடைந்த நிலையில், இறுதி முடிவுகளை அந்நாட்டின் தேர்தல் ஆணையம் அதிகாரபூர்வமாக வெளியிட்டது.

4. இந்தியாவின் முன்னணி விமானப் போக்குவரத்து நிறுவனமான இண்டிகோவின் தலைமைச் செயல் அதிகாரி (சிஇஓ) பீட்டர் எல்பெர்ஸ் தனது பதவியைத் திடீரென ராஜிநாமா செய்தார்.

(i) அந்நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு கூட்டத்தில் இம்முடிவு ஏற்கப்பட்டதாக பங்குச்சந்தை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. பீட்டர் எல்பெர்ஸின் விலகலைத் தொடர்ந்து, நிறுவனத்தின் இணை நிறுவனர் ராகுல் பாட்டியா இடைக்காலமாக மேலாண்மைப் பொறுப்புகளை கவனிப்பார் என அறிவிக்கப்பட்டது.

(ii) கடந்த 2022, செப்டம்பர் முதல் இண்டிகோ சிஇஓ-ஆக பொறுப்பில் இருந்தார் பீட்டர் எல்பெர்ஸ்.

5. மத்திய அரசுத் துறைகளில் நிர்வாகப் பணியிடங்கள் மற்றும் அலுவலர்கள் காலிப் பணியிடங்களுக்கான நேரடி நியமனங்களில் இதர பிற்படுத்தப்பட்டப் பிரிவினருக்கு (ஓபிசி) 27 சதவீத இடஒதுக்கீடு அமல்படுத்தப்படுகிறது என்று மத்திய அரசுத்தரப்பில் நாடாளுமன்றத்தில்

தெரிவிக்கப்பட்டது. ஓபிசி பிரிவினருக்கான இட ஒதுக்கீடு தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணையமைச்சர் பி.எல்.வர்மா எழுத்துபூர்வமாக அளித்த பதிலில் கூறியிருப்பதாவது:

- மத்திய பணியாளர் நலன் மற்றும் பயிற்சித் துறையின் 1993– ஆம் ஆண்டு செப்டம்பர் 8-ஆம் தேதியிட்ட அலுவலக தீர்மானம் (ஓஎம்) மற்றும் பிற அரசுத் துறைகள் சார்பில் அவ்வப்போது வெளியிடப்படும் அலுவல் தீர்மானங்களின் அடிப்படையில் இட ஒதுக்கீடு கொள்கையை மத்திய அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.
- அதன்படி, மத்திய அரசுத் துறைகளில் நிர்வாகப் பணி காலியிடங்கள் மற்றும் அலுவலர் பணியிடங்களுக்கான நேரடி நியமனங்களில் ஓபிசி பிரிவினருக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது.
- துடிப்பான இந்தியாவுக்கான பிரதமரின் இளம் சாதனையாளர்கள் கல்வி உதவித் தொகைத் திட்டம் (பிஎம்-ஒய்ஏஎஸ்ஏஎஸ் விஐ), இளம் சாதனையாளர்களுக்கான உயர்கல்விக்கான கல்வி உதவித் தொகை திட்டம் உள்பட ஓபிசி பிரிவு மாணவர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை மத்திய அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.
- சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மற்றும் துறைகள் உள்பட பல்வேறு தரப்பினருடனான ஆலோசனையின் அடிப்படையில் ஓபிசி பிரிவினருக்கான நலத் திட்டங்களை மத்திய அரசு அவ்வப்போது மறு ஆய்வு செய்து வருகிறது என்றுதெரிவித்தார்.

6. 15-ஆவது ஐந்தாண்டு திட்டத்தில் இந்தியாவை ஒட்டிய எல்லைப் பகுதிகள் அருகே போக்குவரத்து கட்டமைப்பை அடுத்த 5 ஆண்டுகளில் பலப்படுத்த சீனா திட்டமிட்டுள்ளது.

(i) தற்போது நடைபெற்று வரும் சீன நாடாளுமன்ற (தேசிய மக்கள் காங்கிரஸ்) கூட்டத்தொடரில், இந்தத் திட்டம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதற்கு நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்க அதிக வாய்ப்புள்ளது.

(ii) பின்னடைவை சந்தித்து வரும் சீன பொருளாதாரத்தை ஊக்குவிக்க, செயற்கை நுண்ணிறவு (ஏஐ), மின்வாகன உற்பத்தி, மின்கலன்கள் தயாரிப்பு ஆகியவற்றை மையமாகக் கொண்ட 15-ஆவது ஐந்தாண்டு திட்டத்துக்கு ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி ஒப்புதல் அளித்துள்ளது.

(iii) ஷின்ஜியாங் மாகாணத்தில் உள்ள தியான்ஷன் மலைகளின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகள், உய்கர் தன்னாட்சி பிராந்தியம் ஆகியவற்றை இணைக்கும் 394 கி.மீ. தொலைவிலான நெடுஞ்சாலை திட்டம் 15-ஆவது ஐந்தாண்டு திட்ட வரைவு அறிக்கையில் இடம் பெற்றிருப்பதாக ஹாங்காங்கை தலைமையிடமாகக் கொண்ட சௌத் சீனா மார்னிங் போஸ்ட் நாளிதழ் தெரிவித்துள்ளது.

(iv) இந்த நெடுஞ்சாலை, 1962 எல்லை இந்தியா-சீனா போரைத் தொடர்ந்து சர்சைக்குரிய அக்சய் சின் பகுதியில் அமைக்கப்பட்ட சாலைக்கு இணையாகச் செல்கிறது.

(v) மத்திய ஷின்ஜியாங் மாகாணத்தின் துஷான்ஷி-குகா நெடுஞ்சாலை கட்டுமானப் பணிகள் நிகழாண்டு செப்டம்பரில் தொடங்கி 2032-இல் நிறைவுபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(vi) ஐந்தாண்டு திட்டத்தில் திபெத் மாகாணத்தில் உள்ள 3 நெடுஞ்சாலைக்ளைப் புதுப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(vii) சீனாவின் 14-ஆவது ஐந்தாண்டு திட்டம் கடந்த ஆண்டில் நிறைவு பெற்றது. இந்தத் திட்டத்தில் இந்திய எல்லையையொட்டிய திபெத் மாகாணத்தில் பாயும் பிரம்மபுத்திரா நதியின் குறுக்கே உலகின் மிகப்பெரிய அணையைக்கட்டும் பணிகளை கடந்த ஆண்டு ஜூலையில் சீனா தொடங்கியது.

(viii) இந்தத் திட்டத்தால் பெரும் அளவில் நீரைச் சேமித்து வைக்க முடியும் என்பதால், நதியின் நீரோட்டத்தை மாற்றியமைக்க முடியும். பிரம்மபுத்திரா நதியின் வடிநில பகுதியில் உள்ள இந்தியா மற்றும் வங்கதேசத்தில் இந்தத் திட்டதுக்கு எதிர்ப்பு எழுந்துள்ளது.

(ix) இந்தச் சூழலில், இந்தியாவின் எல்லை அருகே உள்ள சர்சைக்குரிய திபெத் பகுதிகளில் நெடுஞ்சாலைகள், அதிவேக ரயில்கள் என உள்கட்டமைப்பு வசதிகளை சீனா தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது.

7. சீனா உள்பட இந்தியாவுடன் நில எல்லையைப் பகிரும் அனைத்து நாடுகளுக்கும் அந்நிய நேரடி முதலீடு (எஃப்டிஐ) விதிகளைத் தளர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன . இதையொட்டி, கடந்த 2020- இல் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு 3-இல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(i) இந்தியாவுடன் சீனா, வங்கதேசம், பாகிஸ்தான், பூடான், நேபாளம், மியான்மர், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் நில எல்லையைப் பகிர்ந்து கொண்டுள்ளன. இந்த நாடுகளைச் சேர்ந்த பங்கு தாரர்களைக் கொண்ட அந்நிய நிறுவனங்கள், இந்தியாவில் எந்தத் துறையிலும் முதலீடு செய்யும் முன்பாக மத்திய அரசிடம் முன் அனுமதி பெறுவது கடந்த 2020-இல் கட்டாயமாக்கப்பட்டது. இது தொடர்பாக செய்திக்குறிப்பு-3 வெளியிடப்பட்டிருந்தது. இந்தச் சூழலில், சீனா உள்பட இந்தியாவுடன் நில எல்லையைப் பகிரும் அனைத்து நாடுகளுக்கும் எஃப்டிஐ விதிகளில் தளர்வளிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன

(ii) கடந்த 2020, ஜூன் மாதம் கல்வான் பள்ளத்தாக்கில் இந்திய-சீனப் படையினர் மோதலைத் தொடர்ந்து, இருதரப்பு உறவுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இதையடுத்து, டிக்டாக், வீசாட் உள்பட 200-க்கும் மேற்பட்ட சீன செயலிகளுக்கு இந்தியா தடை விதித்தது.

(iii) இப்போது இந்தியாவின் இரண்டாவது பெரிய வர்த்தக கூட்டாளியாக சீனா உள்ளபோதிலும், அந்நாட்டிடம் இருந்து இந்தியாவுக்கு குறைந்த அளவில்தான் நேரடி அந்நிய முதலீடு கிடைக்கிறது. கடந்த 2024-25-இல் சீனாவுக்கான இந்தியாவின் ஏற்றுமதி 16.66 பில்லியன் டாலராக உயர்ந்தது. முந்தைய ஆண்டை (14.25 பில்லியன் டாலர்) ஒப்பிடுகையில் இது 14.5 சதவீத உயர்வாகும். அதேநேரம், சீனாவில் இருந்து இந்தியாவின் இறக்குமதி 101.73 பில்லியன் டாலரில் இருந்து 113.45 பில்லியன் டாலராக உயர்ந்தது. இதன் மூலம் வர்த்தகப் பற்றாக்குறை 85 பில்லியன் டாலரில் இருந்து 99.2 பில்லியன் டாலராக அதிகரித்தது.

(iv) நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் முதல் ஜனவரி வரையிலான கால கட்டத்தில் சீனாவுக்கான இந்தியாவின் ஏற்றுமதி 15.88 பில்லியன் டாலராகவும், இறக்குமதி 108.18 பில்லியன் டாலராகவும் உயர்ந்தது. வர்த்தகப் பற்றாக்குறை 92.3 பில்லியன் டாலர்களாகும்.

(v) மேலும் சில திட்டங்களுக்கு...:

- தில்லி- மும்பை விரைவுச் சாலையில், மத்திய பிரதேசத்தின் பத்னாவர், திமர்வானி இடையிலான பிரிவை ரூ.3,839 கோடியில் நான்கு வழித்தடமாக மேம்படுத்தவும், மேற்கு வங்கம், ஜார்க்கண்டில் ரூ.4,474 கோடி மதிப்பீட்டில் 2 பன்முக ரயில் வழித்தட திட்டங்களுக்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.

(vi) ஜல்ஜீவன் திட்டம் நீட்டிப்பு

- கிராமப்புறங்களில் வீடுகளுக்கு குழாய் மூலம் சுகாதாரமான குடிநீர் வழங்கும் ஜல்ஜீ வன் திட்டச் செலவை ரூ.8.7 லட்சம் கோடியாக உயர்த்தவும், இத்திட்டத்தை 2028 டிசம்பர் வரை நீட்டிக்கவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.

8.ஈரான் மற்றும் அமெரிக்கா இஸ்ரேல் போர் சூழல் காரணமாக தமிழகத்தில் சென்னை, வேலூர் உள்பட அனைத்து மாவட்டங்களிலும் செவ்வாய்க்கிழமை நிலைமை கட்டுக்குள் இருந்தாலும் புதன்கிழமைக்குப் பிறகு பல இடங்களில் உணவக சேகைள், சுற்றுலாவை நம்பியுள்ள உணவு விடுதிகள் எரிவாயு சிலிண்டர்கள் தட்டுப்பாட்டால் முடங்கும் அபாயத்தில் உள்ளன.

(i) வணிக எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் பாதிக்கப்பட்டால் தமிழகத்தில் அடுத்த இரு நாள்களில் ஒரு லட்சம் உணவகங்கள் மூடப்படும் என தமிழ்நாடு ஹோட்டல் உரி மையாளர்கள்

சங்கத் தலைவர் தெரிவித்தார்.

9. நாட்டில் பொது சிவில் சட்டம் இயற்றப்படுவது அவசியம் என்று உச்சநீதி மன்றம் தெரிவித்தது.

(i) முஸ்லிம் பெண்களுக்கு பாகுபாடு காட்டும் முஸ்லிம் தனிநபர் சட்டம் (ஷரியத்) பயன்பாட்டுச் சட்டம் 1937-இன் பிரிவுகளை ரத்து செய்ய வலியுறுத்தி, உச்சநீதிமன்றத்தில் பௌலொமி பாவினி சுக்லா என்ற வழக்குரைஞர் உள்பட பலர் மனு தாக்கல் செய்துள்ளனர்.

(ii) இந்த மனுவை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதி ஜயமால்ய பாக்சி, நீதிபதி ஆர்.மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது. அப்போது தனிநபர் சட்ட நடைமுறை அரசமைப்புச்சட்டத்துக்கு ஏற்ப உள்ளதா என்பதை நீதிமன்றம் முடிவு செய்ய முடியுமா என்று நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

(iii) 1951-ஆம் ஆண்டின் நரசு அப்பா மாலி வழக்கில், தனிநபர் சட்டங்கள் (திருமணம், சொத்துரிமை உள்ளிட்டவை தொடர்பான மதச் சட்டங்கள்) அரசமைப்புச் சட்டத்துக்கு இணங்கி உள்ளதா என்பதை ஆராய முடியாது என பம்பாய் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது என்று நீதிபதி பாக்சி குறிப்பிட்டார்.

(iv) தனிநபர் சட்டத்தில் நீதிமன்றம் தலையிட முடியுமா என்று நீதிபதிகள் அமர்வு எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த மனுதாரர் தரப்பு வழக்குரைஞர் பிரசாந்த் பூஷண், 'ஷாயரா பானு வழக்கில் முத்தலாக் முறை அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது என்று தீர்ப்பளித்து, அந்த முறையை உச்சநீதி மன்றம் ரத்து செய்தது' என்று சுட்டிக்காட்டினார். அந்தத் தீர்ப்புக்குப் பின்னர், 'முஸ்லிம் ஆண்களைப் போல அந்த மதப் பெண்களுக்கு சம உரிமை இல்லை என்ற சூழல் நாட்டில் இருக்கமுடியாது' என்று அவர் வாதிட்டார்.

(v) இந்த விவகாரத்தில் நீதிமன்றம் தலையிடுவதன் மூலம், முஸ்லிம் பெண்களுக்கு எந்தச் சட்டப் பாதுகாப்பும் இல்லாமல் போய் விடுமோ என்று தலைமை நீதிபதி சூர்ய காந்த் கவலை தெரிவித்தார்.

10.அறம் தவறிய அரசு வணிகம் - தமிழ்நாட்டில் மதுபான வர்த்தகத்தில் (TASMAC) மாநில அரசின் ஈடுபாடு :-

- மது விற்பனை மூலம் மாநில அரசு ஆண்டுக்கு ₹45,000 கோடிக்கு மேல் வருவாய் ஈட்டுகிறது. மாநிலத்தில் தினமும் 70 லட்சம் (7 மில்லியன்) மக்கள் மது அருந்துவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு முழுவதும் தற்போது 5,329 அரசு நடத்தும் மதுபானக் கடைகள் உள்ளன, அவை சுமார் 200 வகையான மதுபானங்களை வழங்குகின்றன.
- சராசரியாக, ஒரு வழக்கமான நுகர்வோர் அரசு விற்பனை நிலையங்களில் இருந்து வாங்கும் மதுபானத்திற்கு மாதத்திற்கு சுமார் ₹7,000 செலவிடுகிறார்கள்.
- பண்டிகைகளுக்கு அரசாங்கம் குறிப்பிட்ட விற்பனை இலக்குகளை நிர்ணயிக்கிறது; எடுத்துக்காட்டாக, 2025 ஆம் ஆண்டிற்கான தீபாவளி விற்பனை இலக்கு ₹600 கோடியாக நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், உண்மையான விற்பனை ₹789 கோடியைத் தாண்டியது. ஒப்பிடுகையில், 2024 தீபாவளி விற்பனை ₹438 கோடியாக இருந்தது.
- * ₹60 முதல் ₹70 வரை விலை கொண்ட "டெட்ரா பேக்குகள்" அறிமுகப்படுத்தப்பட்டது கடுமையாக விமர்சிக்கப்படுகிறது, ஏனெனில் இது பள்ளிப் பைகளில் மாணவர்கள் கூட மதுவை எளிதாக மறைக்க அனுமதிக்கிறது.
- மாநிலத்தில் சிறுநீரக (சிறுநீரக) செயலிழப்புகள் அதிகரிப்பதற்கு மது அருந்துதல் ஒரு முக்கிய காரணமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனால் நோயாளிகளின் வருகையை நிர்வகிக்க அரசு மருத்துவமனைகள் சிறுநீரக சிகிச்சை மையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.
- விற்பனை மூலம் மாநிலம் பல்லாயிரக்கணக்கான கோடி வருவாய் ஈட்டினாலும், மதுவின் ஆபத்துகள் குறித்த பொது விழிப்புணர்வு திட்டங்களுக்கு ₹10 கோடி மட்டுமே ஒதுக்குகிறது.
- மதுவை "அரசாங்க வணிகமாக" இயல்பாக்குவது இளைய தலைமுறையினர் பிற சட்டவிரோத போதைப்பொருட்களை பரிசோதிக்கும் வாய்ப்பைக் குறைத்துள்ளது.
- மதுபான வியாபாரியாக அவரது பங்கு சமூக நெறிமுறைகளுக்கு துரோகம்

இழைப்பதாகவும், அதன் குடிமக்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை விட வருவாயை முன்னுரிமைப்படுத்துவதாகவும் அவர் கூறுகிறார்.

- படிப்படியாக கடைகளை மூடி, இறுதியில் முழுமையான தடையை விதிக்க அழைப்பு விடுக்கிறது, அதே நேரத்தில் போதைப்பொருளிலிருந்து லாபம் ஈட்டும்போது குடும்பங்களின் நலனைப் பாதுகாக்க முடியாது என்று வலியுறுத்துகிறது